**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 209/2006**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 மும்மூர்த்தி ராஜா திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 05.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) என் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து சம்பந்தமாக 1986 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அந்த தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்து அந்த மேல்முறையீடு திரும்ப பெறப்பட்டதன் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேல்முறையீட்டில் புதியதாக வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கோரி மனு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் மேல்முறையீட்டில் மனு தாக்கல் செய்து அந்த மனுவில் நீதிமன்றம் ரூ.1000/– செலவுத்தொகை கொடுக்க வேண்டுமென்ற உத்தரவை பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2) புதிய வழக்கு தாக்கல் செய்ய மேல்முறையீட்டில் அனுமதி அளிக்கப்பட்டு உத்தரவு பிறப்பித்ததை எதிர்த்து நான் சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். மேற்படி மனுவில் பிறப்பிக்கப்பட்ட நிபந்தனை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எனது சாட்சிய பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. மேல்முறையீட்டின் இடைநிலை மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி செலவுத்தொகை வைப்பீடு செய்யப்பட்டதா இல்லையா என்ற விபரத்தை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் வைப்பீடு செய்யவில்லை என எனது வழக்கறிஞர் சொன்னார்.

3) நீதிமன்ற உத்தரவின்படி செலவுத்தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதன் அசல் இரசீதை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி விபரம் தெரிந்து கொண்டே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தொகை செலுத்தப்பட்டதன் அடிப்படையில் தான் மேல்முறையீடு திரும்ப பெற அனுமதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்களை சரியாக பரிசீலனை செய்யாமல் தொகை செலுத்தவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.225/1986 ல் புல எண் தவறாக உள்ளது என்றும் சரியான புல எண்ணை குறிப்பிட்டு புதியதாக வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கேட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியவில்லை.

4) அவ்வாறு திரும்ப பெறப்பட்ட பின்னிட்டு தான் சர்வே எண்.598 என குறிப்பிட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியவில்லை. இவ்வழக்கு எந்த சர்வே எண்ணிற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. அ.வ.எண்.225/1986 ல் என்ன சர்வே எண் குறித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. அ.வ.எ.ண்.225/1986 ல் சர்வே எண்.578 என தவறாக குறிப்பிடப்பட்டதால் அந்த வழக்கின் மேல்முறையீடு திரும்ப பெறப்பட்டு சரியான புல எண்.598 என இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும் மேற்படி விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு எனது தகப்பனார் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.323/2007 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் செய்தார்.

5) அ.வ.எண்.323/2007 வழக்கின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.598 ஆகும். எனது தகப்பனார் தாக்கல் செய்த வழக்கின் சர்வே எண்ணும், இவ்வழக்கின் சர்வே எண்ணும் ஒன்று தான் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்தார். அ..வ.எண்.323/2007 வழக்கில் சர்வே எண்.598 குறித்து விளம்புகை பரிகாரம் கேட்டாரா என்றால் இல்லை. எனது தகப்பனார் அ.வ.எண்.323/2007 வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்களை தான் தற்போது நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

6) இவ்வழக்கு சொத்து சம்பந்தமான பைமாஷ் எண் குறித்து ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பைமாஷ் எண் குறித்து பதிவேட்டில் நான் சொல்லும் சர்வே எண் இடம் பெற்று உள்ளதா என பார்த்தேனா என்றால் இல்லை. அ.வ.எண்.323/2007 வழக்கில் உள்ள சர்வே எண்.598 ல் பைமாஷ் எண், பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. பைமாஷ் எண்ணாக உள்ள போது ஒரு பட்டா எண் சர்வே எண்ணாக மாறிய பின்னிட்டு ஒரு பட்டா எண்ணும் கொடுப்பார்கள் என்றால் அது பற்றி தெரியாது. இவ்வழக்கில் கிராம நிர்வாக அலுவலர் சாட்சியம் அளித்து தாக்கல் செய்த பதிவேட்டின் விபரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

7) அ.வ.எண்.225/1986 ல் எங்கள் தரப்பில் தாக்கல் செய்த பதிலுரை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பைமாஷ் எண் முடிந்த பின்னிட்டு 1964 ம் வருடம் ஒரு அ பதிவேடு ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ஊழியம் நிலம் வேறு, ரயத்துவாரி புஞ்சை நிலம் வேறு என்றால் அது பற்றி தெரியவில்லை. ஊழியம் நிலம் என்பது அரசாங்கத்தால் ஊழியம் செய்பவர்களுக்கு அரசாங்கத்தால் இனாமாக வழங்கப்படும் நிலம் என்றால் அது

பற்றி தெரியாது. அ.வ.எ.ண்.225/1986 வழக்கில் எனது குடும்பத்தார் தாக்கல் செய்த பதிலுரையில் பைமாஷ் எண்.95, 145, 147 ஆகிய நிலங்கள் அரசாங்கத்தால் இனாமாக வழங்கப்பட்ட நிலங்கள் என கூறியுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. கிராம நிர்வாக அலுவலர் தனது சாட்சியத்தில் சர்வே எண்.598 ரயத்துவாரி நிலம் என்றும் இனாம் நிலம் அல்ல என சாட்சியம் அளித்துள்ளது தெரியுமா என்றால் தெரியாது.

8) பைமாஷ் எண்கள்.95, 145, 147 ஆகியவற்றிற்கு பட்டா எண்.104 என பைமாஷ் பதிவேட்டில் ராமன் என்பவர் பெயருக்கு வழங்கப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ராமன் எங்கள் குடும்பத்தை சேர்ந்தவரா என்றால் ஆமாம். 1964 க்கு பின்னிட்டு அ பதிவேட்டில் கீழப்பகுதி கிராம சர்வே எண்.42/2, 160/1, 406/1, 412/1, 520/3 ஆகிய நிலங்கள் ஊழியம் நிலங்கள் மற்றும் இனாம் நிலங்கள் என வா.சா.2 சாட்சி அளித்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நிலங்களில் சர்வே எண்.520/3 அழகன் வகையறா பெயருக்கு பட்டா நிலங்கள் வழங்கப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியவில்லை. அழகன் வகையறா எங்கள் குடும்பத்தை சேர்ந்தவரா என்றால் ஆமாம்.

9) மானியமாக வழங்கப்பட்ட நிலங்கள் எங்கள் குடும்பத்தாரால் பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது என்றால் இல்லை, தற்போது வரை கூட்டாக உள்ளது. சர்வே எண்.598 க்கு வடபுறம் என்ன சர்வே எண் உள்ளது என்றால் சர்வே எண்.601 கருப்பண்ணன் என்பவர் பெயரில் உள்ளது. வா.சா.3 வகையறாக்கள் சர்வே எண்.601 ல் அனுபவம் செய்கிறார்களா என்றால் ஆமாம். வா.சா.3 எனது உறவினரா என்றால் எனது துாரத்து உறவினர். எனக்கும், அவருக்கும் எந்த விரோதமும் இல்லை. வழக்கு சொத்தில் வாதியின் குடும்பத்தார் கிரையம் பெற்று அனுபவித்து வந்த விபரம் வா.சா.3 குடும்பத்தாருக்கு தெரியும் என்பதால் தான் அவர் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

10) தாவா சர்வே எண்.598 என குறிப்பிட்டு விளம்புகை பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு உண்மையை மறைத்து அ.வ.எண்.323/2007 வழக்கை தாக்கல் செய்துதோம் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா எண்.690 என்றால் அது பற்றி தெரியவில்லை. பட்டா எண்.690 க்கு வாதி குடும்பத்தார் தீர்வை செலுத்தி வந்தது தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை வாதி குடும்பத்தார் அனுபவம் செய்து வந்து தீர்வை செலுத்தி வந்த விபரம் எனக்கும், எனது குடும்பத்தாருக்கும் நன்கு தெரியும் என்றால் சரியல்ல. சர்வே எண்.598 ஐ இனாம் நிலம் என தவறாக ஏற்பட்ட பதிவை பயன்படுத்தி எங்கள் குடும்பத்தார் பொய்யாக எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல. பைமாஷ் கணக்கிற்கு பின்னிட்டு தவறாக ஏற்பட்ட

வருவாய்த்துறையின் ஆவணங்களின் அடிப்படையில் எங்கள் குடும்பத்தாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தான் அ.வ.எண்.323/2007 என்றால் சரியல்ல.

11) இவ்வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.323/2007 வழக்கும் அதில் ஏற்பட்ட தீர்ப்பும் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் தாவா சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என எந்த தீர்வும் முடிவாகவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக சரியான புல எண்ணை மாற்றி கொடுக்க வேண்டுமென வருவாய்த்துறையில் வாதிகள் மனு கொடுத்து விசாரணை செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வருவாய்த்துறையின் விசாரணையின் போது நான் நீதிமன்ற வழக்கை சுட்டிக்காட்டியதன் அடிப்படையில் நீதிமன்ற வழக்கில் ஏற்படும் தீர்ப்பினை ஒட்டி வருவாய்த்துறையில் திருத்தம் செய்யப்படும் என மேற்படி மனு முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

12) எங்கள் குடும்பத்தினரின் பெயரில் ஏற்பட்ட தவறான பட்டாவை தற்போது வரை நாங்கள் பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் பைமாஷ் கணக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட தவறான ஆவணங்களின் அடிப்படையில் உருவானவை என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரிந்து இருந்தும் உண்மையை கூறினால் எனக்கு விரோதம் ஆகி விடும் என்பதால் தெரியாது என மறைத்து சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கு மானியமாக கொடுக்கப்பட்ட இடம் வேறு, தாவா சொத்து வேறு என்றால் சரியல்ல. ஆதியில் நிலங்கள் குறித்து குழி முறையில் கணக்கிடப்படும் என்றால் அது பற்றி தெரியாது.

13) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள 1ம் வாதியின் தகப்பனாரின் கிரைய ஆவணத்தில் உள்ள விபரம் பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி கிரைய ஆவணத்தில் உள்ள நான்கெல்லை விபரங்களும், சர்வே எண்.598ன் ஸ்தலத்தில் உள்ள நான்கெல்லை விபரங்களும் ஒன்றாக உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் முன்னோர்களுக்கு வழங்கப்பட்ட பைமாஷ் எண்கள்.95, 145, 147 உரிய சர்வே எண்கள் குறித்து தெரியுமா என்றால் வழக்கறிஞரை கேட்க வேண்டும். 1ம் வாதியின் தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்து தான் தாவா சொத்து என்றும், வருவாய்த்துறையில் ஏற்பட்ட தவறான பதிவை சரிசெய்ய தான் வாதி விளம்புகை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

14) தற்போது வரை வாதிகள் தான் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகின்றனர் என்றும் எனக்கும், எனது குடும்பத்தாருக்கும் தாவா சொத்தில் எந்தவித அனுபவமோ, பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல.

தவறான வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் ஏற்படுத்திக் கொண்ட அனைத்து ஆவணங்களும் சட்டப்படி செல்லாது என்றும், வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனவே வாதிகள் இவ்வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் சட்டப்படி கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எனது தரப்பு வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் எனது எதிர் வாதத்தை நிரூபிக்க போதுமானதல்ல என்றால் சரியல்ல. வருவாய்த்துறையில் ஏற்பட்ட தவறை எங்களது சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**